# குளித்தலை நகராட்சி

10.12.2019.ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்(பொ)
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்–01. குளித்தலை நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ) திரு.ந.புகழேந்தி அவர்களின் நவம்பர் 2019.ஆம் மாத தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்–02. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வைகைநல்லூர் வடக்கு கிராமம் சர்வே எண்.136/3, 4 பகுதியில் 2.35 ஏக்கர் பரப்பளவில் உள்ள இடத்தில் குடியிருப்பு மனைகளாக பிரிக்க அனுமதிகோரி, திரு.வே.பல்லவிராஜா என்பவர் நகராட்சிக்கு விண்ணப்பம் செய்ததை தொடர்ந்து, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டதில், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.725/2019/திம2, நாள்–18.05.2019.ல் சாலை அமைப்பு வரைபடம் தயார் செய்து, வரைபடத்தின்படி சாலைகள் முறையாக அமைத்து சாலை மற்றும் பூங்கா இடத்தினை நகராட்சிவசம் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து, மனை உரிமையாளர் தார்சாலை அமைத்துள்ளதினை, மன்ற தீர்மான எண்.168, நாள்–26.08.2019.ன்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பூங்கா இடத்தினை பத்திர பதிவு எண்.2423/2019, நாள்–29.08.2019 வாயிலாக, நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. அதன்பேரில், மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களின் கடிதம் ந.க.எண்.725/2019/திம2, நாள்–18.11.2019.ல் மவ/ந.ஊ.உ.இ.(திம) எண்.35/2019 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மனைப்பிரிவில் உள்ள சாலைகளை முறையாக அமைத்து சாலை மற்றும் பூங்கா இடத்தினை நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதால், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் மவ/ந.ஊ.உ.இ.(திம) எண்.35/2019.க்கு மனைப்பிரிவு அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.538/2019/பி2)

பொருள்–03. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட மணப்பாறைரோடு பிரிவு வாளாந்தூர்ரோடு பகுதியில் வார்டு–சி, பிளாக்–24, நகரளவை எண்.35/1, 35/2B.ல் (பழைய சர்வே எண்.201/1A, 201/1B) திருமதி.இரா.அமுதா, க/பெ.க.ராஜேந்திரன், 105–எம்.பி.என். முதல்தெரு, முசிறி என்பவர், தனது நிலத்தில் உள்ள விவசாய நில பயன்பாட்டை வணிகப் பகுதியாக மாற்ற விண்ணபித்துள்ளார். அத்துடன் நில உபயோக மாற்றத்திற்கான நில அபிவிருத்தி கட்டணம் ரூ.8100/–ஐ, சலான் எண்.19–20/0002917, நாள்–26.09.2019.ல் கட்டியுள்ளார். மேற்குறிப்பிட்ட இடத்திற்கு வார்டு–சி, பிளாக்–24, நகரளவை எண்.32, 33.ல் நகரளவை ஆவணங்களின்படி, கரை, வாய்க்கால் மற்றும் அணுகுசாலையாக தார்சாலை நகராட்சி எல்லைக்குட்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் விண்ணபத்தை மேல்நடவடிக்கைக்காக நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர், திருச்சி மண்டலத்திற்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2633/2019/பி2)

பொருள்–04. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-F-1522 என்ற கழிவுநீர் வாகனத்திற்கு தகுதிசான்று பெற, பழுதுநீக்கம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,30,000/–க்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலம்.

(ந.க.எண்.2581/2019/எச்1)

பொருள்– 05. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-AS-5098 மற்றும் TN-47-AS-5109 என்ற எண்ணுள்ள வாகனங்களுக்கு டயர் மற்றும் டியூப் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.15000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2617/2019/எச்1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சி குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் குடிநீரில் திரவ குளோரினேசன் செய்யப்படுகிறது. அதற்கான நாப்பாளையம், பெரியார்நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் உள்ள திரவ குளோரின் மேலேற்றும் பம்ப்களிலான பழுதுகள் நீக்கம் செய்யப்பட்டு, உதிரிபாகங்கள் மாற்றம் செய்து, வயரிங், மின்உபகரணங்கள் உள்பட சரிசெய்தல் பணி அவசர அவசியம் கருதி, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் மேற்கொள்ளப்பட்டது. மற்றும் ஸ்ரீபாலாஜி அண்ட் கம்பெனி, சேலம் நிறுவனத்தாருக்கு பட்டியல் தொகை ரூ.1,74,640/–ஐ வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1481/2019/இ1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சி பகுதியிலான பொதுமக்களிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அறிவிப்பின்படியான சிறப்பு குறைதீர் நாள் மனுக்கள் பெறுவதன் விளம்பரத்திற்கு பிளக்ஸ் தயாரித்து வழஙக 22.08.2019 அன்று அவசர அவசியம் கருதி பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | விபரம் | நிறுவனம் | அளவு | எண் ணம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1) | சிறப்பு குறைதீர் நாள் கூட்டம் 25.08.2019 முதல் 29.08.2019 வரையிலானதன் விளம்பர பிளக்ஸ் அமைத்தல் | 1). TVS டிஜிட்டல், காவேரிநகர், LVBஎதிரில், குளித்தலை. | 8x10<br>6x8 | 5<br>2 | 4464.00 |
| | | 2). தீபம் பிரிண்டர்ஸ், திருச்–கரூர் மெயின்ரோடு, குளித்தலை. | ,, | ,, | 4960.00 |
| | | 3). வேல் பிரிண்டர்ஸ், சண்முகா தியேட்டர் அருகில், குளித்தலை. | ,, | ,, | 5456.00 |

அலுவலக குறிப்பு– அவசர அவசியம் கருதி, வரிசை எண்.1ல் ஆன குறைந்த விலைப்புள்ளி வழங்கிய TVS டிஜிட்டல், காவேரிநகர், குளித்தலை நிறுவனத்திற்கு, ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று, பணி உத்தரவு வழங்கியதையும், செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1983/2019/இ1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உருவாகும் குப்பைகளை தரம்பிரிக்க பெரியார்நகரில் உள்ள MCC.ல் (Resource Recovery Centre) தனித்தனியாக பிரித்தெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. அங்கு பணிபுரியும் பணியாளர்களுக்கு அவசர அவசியம் கருதி மின்விசிறி அமைக்க கீதா எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனம்மூலம் வாங்க விலைப்புள்ளி பெறப்பட்டதில் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அவசர அவசியம் கருதி, ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும், கீதா எலக்ட்ரிக்கல்ஸ், குளித்தலை நிறுவனத்திற்கு பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டு ரூ.2,055/– பட்டியல் தொகை வழங்கவும் மன்றம் அங்கீகரித்து அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.333/2019/இ1)

பொருள்– 09. குளித்தலை நகராட்சி அலுவலகத்தில் மின்பயன்பாடுகள் அதிகமாக உள்ளதால் வெந்து பழுதடைந்த வயரிங் புதுப்பித்தும், புதியதாக மும்முனை இணைப்பு பெறவும், பணிகள் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானதாக உள்ளது. அதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.90 லட்சத்திற்குரிய பணியினை அவசரஅவசியம் கருதி, தமிழ்நாடு நகராடசிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் திரு.எம்.செந்தில்குமார், ஒப்பந்ததாரர்மூலம் பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும், பட்டியல் தொகை ரூ.1,80,150/–ஐ, வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.2964/2018/இ1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சி பகுதியிலான வார்டு–19, கொல்லம்பட்டறைதெருவில் உள்ள சிறுபாலம் பழுது ஏற்பட்டு பொதுமக்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் வண்டி வாகனங்கள் செல்ல சிரமமாக உள்ளது. அவசர அவசியம் கருதி, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் பணியினை செய்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.0.75 லட்ச மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள திரு.எம்.செந்தில்குமார், ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. அதன் பட்டியல் தொகை ரூ.56,166/– வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.2649/2018/இ1)

பொருள்– 11. குளித்தலை நகராட்சி அலுவலக உபயோகத்திலான கணினி மற்றும் கணினி உபகரணங்கள் அவசர அவசிய நேரங்களில் பராமரிப்பு செய்யவேண்டி விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் உத்தரவாத காலத்திற்கு உட்படாத இனங்களில் கீழ்ககண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | தேவையான எண்ணிக்கை | Computer Park, Covai Road, Karur | | Unique Micro Computers | | Lighten Systems | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1.ன் விலை | தேவை யானவை விலை | 1.ன் விலை | தேவை யானவை விலை | 1.ன் விலை | தேவை யானவை விலை |
| 1) | System with Original Antivirus Soft ware | 16 | 3050/- | 48800/- | 3250/- | 52000/- | 3450/- | 55200/- |
| 2) | Colour Printer | 2 | 4250/- | 8500/- | 4550/- | 9100/- | 5000/- | 10000/- |
| 3) | Lazer Printer | 8 | 3820/- | 30560/- | 4000/- | 32000/- | 4200/- | 33600/- |
| 4) | Dot Matrix Printer | 2 | 4620/- | 9240/- | 5000/- | 10000/- | 5200/- | 10400/- |
| | Total | | | 97100/- | | 103100/- | | 109200/- |

அலுவலக குறிப்பு– மேற்கண்ட விபரப்படி வரிசை எண்.1 முதல் 4 வரையிலான இனங்களுக்கு குறைவான விலைப்புள்ளி வழங்கிய Computer Park நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை, விலைப்புள்ளி தொகைக்கு 18% GST உள்பட ஏற்கலாம். ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2557/2019/இ1)

பொருள்– 12. குளித்தலை நகராட்சி சத்தியமங்கலம் உரக்கிடங்கில் திட்டப்பணிகளின் கட்டுமான பணிக்கு புதிய கட்டிடத்தில் தற்காலிக மின் இணைப்பு 3KV பெறவேண்டி உள்ளது. அதற்குரிய கட்டணம் அய்யர்மலை தமிழ்நாடு மின்சார வரிய அலுவலக பட்டியலின்படி ரூ.4300/–ஐ செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.3341/2018/இ1)

பொருள்– 13. குளித்தலை நகராட்சி, காவேரி நகர், பூங்கோதை ஆஸ்பத்திரி அருகில் உள்ள பாலத்தில் Man Hole.ன் பழுதடைந்த மூடியை அகற்றிவிட்டு, புதியது அமைக்கவேண்டி உள்ளது. அவசர அவசியம் கருதி 07.11.2019.ல் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | விலைப்புள்ளிகள் விபரம் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி, காவேரிநகர் பூங்கோதை ஆஸ்பத்தரி அருகில் பாலத்தில் Man Hole.ல் 36”x36” அளவில் புதிய இரும்பு மூடி அமைத்தல் | 1). ஸ்ரீசக்தி வெல்டிங் & டிங்கரின் ஒர்க்ஸ், திருச்சி–கரூர் மெயின்ரோடு, குளித்தலை. | ரூ.15,000/– |
| | | 2). ஸ்ரீசக்தி விநாயகர் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், மார்க்கெட்தெரு, குளித்தலை. | ரூ.18,000/– |
| | | 3). R.L.S.இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சுங்ககேட், குளித்தலை. | ரூ.12,000/– |

அலுவலக குறிப்பு– பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.3.ல் ஆன R.L.S.இன்ஜினியரிங் ஒர்க்ஸ் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும், பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரித்து அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2440/2019/இ1)

*******

# குளித்தலை நகராட்சி

10.12.2019.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 193 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 194 | அனுமதிக்கப்பட்டது. |
| 3 | 3 | 195 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 196 | அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 197 | அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 198 | பதிவு செய்யப்பட்டது. |
| 7 | 7 | 199 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 8 | 8 | 200 | அனுமதிக்கப்பட்டது. |
| 9 | 9 | 201 | பதிவு செய்யப்பட்டது. |
| 10 | 10 | 202 | பதிவு செய்யப்பட்டது. |
| 11 | 11 | 203 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 12 | 12 | 204 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 13 | 13 | 205 | அனுமதி வழங்கப்பட்டது. |

ஒம்/—ந.புகழேந்தி,
நகராட்சி பொறியாளர்,
ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர்(பொ),
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்(பொ),
குளித்தலை நகராட்சி.